ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி
# 11.3 – மன்னிலங்கு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11.3 – மன்னிலங்கு

‡ மன் இலங்கு பாரதத்துத் ⋆
தேர் ஊர்ந்து ⋆
மாவலியைப் பொன் இலங்கு திண் விலங்கில் வைத்துப் ⋆
பொரு கடல் சூழ் ⋆
தென் இலங்கை ஈடழித்த ⋆
தேவர்க்கிது காணீர் ⋆
என் இலங்கு சங்கோடு ⋆
எழில் தோற்றிருந்தேனே ‖ **11.3.1** ‖

இருந்தான் என் உள்ளத்து ⋆
இறைவன் ⋆
கறை சேர் பருந் தாள் களிற்றுக்கு ⋆
அருள் செய்த ⋆
செங்கண் பெருந் தோள் நெடுமாலைப் ⋆
பேர் பாடி ஆட ⋆
வருந்தாதென் கொங்கை ⋆
ஒளி மன்னும் அன்னே ‖ **11.3.2** ‖

அன்னே ! இவரை அறிவன் ⋆
மறை நான்கும் முன்னே உரைத்த ⋆
முனிவர் இவர் வந்து ⋆
பொன்னேய் வளை கவர்ந்து போகார் ⋆
மனம் புகுந்து ⋆

என்னே இவர் எண்ணும் ⋆
எண்ணம் அறியோமே ॥ **11.3.3** ॥

அறியோமே என்று ⋆
உரைக்கலாமே எமக்கு ⋆
வெறியார் பொழில் சூழ் ⋆
வியன் குடந்தை மேவி ⋆
சிறியான் ஓர் பிள்ளையாய் ⋆
மெள்ள நடந்திட்டு ⋆
உறியார் நறு வெண்ணெய் ⋆
உண்டுகந்தார் தம்மையே ॥ **11.3.4** ॥

தம்மையே நாளும் ⋆
வணங்கித் தொழுவார்க்குத் ⋆
தம்மையே ஒக்க ⋆
அருள் செய்வர் ஆதலால் ⋆
தம்மையே நாளும் ⋆
வணங்கித் தொழுதிறைஞ்சி ⋆
தம்மையே பற்றா ⋆
மனத்தென்றும் வைத்தோமே ॥ **11.3.5** ॥

வைத்தார் அடியார் ⋆
மனத்தினில் வைத்து ⋆
இன்பம் உற்றார் ஒளி விசும்பில் ⋆
ஓர் அடி வைத்து ⋆
ஓர் அடிக்கும் எய்த்தாது மண் என்று ⋆
இமையோர் தொழுதிறைஞ்சி ⋆

கைத்தாமரை குவிக்கும் ⋆
கண்ணன் என் கண்ணனையே ‖ **11.3.6** ‖

கண்ணன் ⋆
மனத்துள்ளே நிற்கவும் ⋆
கை வளைகள் என்னோ கழன்ற ⋆
இவை என்ன மாயங்கள் ⋆
பெண் ஆனோம் ⋆
பெண்மையோம் நிற்க ⋆
அவன் மேய அண்ணல் மலையும் ⋆
அரங்கமும் பாடோமே ‖ **11.3.7** ‖

பாடோமே ⋆
எந்தை பெருமானை ⋆
பாடி நின்று ஆடோமே ⋆
ஆயிரம் பேரானை ⋆
பேர் நினைந்து சூடோமே ⋆
சூடும் துழாய் அலங்கல் சூடி ⋆
நாம் கூடோமே ⋆
கூடக் குறிப்பாகில் நன்னெஞ்சே ! ‖ **11.3.8** ‖

நன்னெஞ்சே ! நம் பெருமான் ⋆
நாளும் இனிதமரும் ⋆
அன்னம் சேர் கானல் ⋆
அணியாலி கை தொழுது ⋆
முன்னம் சேர் வல் வினைகள் போக ⋆
முகில் வண்ணன் ⋆

பொன்னம் சேர் சேவடி மேல் ⋆
போதணியப் பெற்றோமே ॥ **11.3.9** ॥

‡ பெற்றார் ஆர் ⋆
ஆயிரம் பேரானைப் ⋆
பேர் பாடப் பெற்றான் ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை ⋆
கற்றாரோ ! முற்றுலகாள்வர் ⋆
இவை கேட்கல் உற்றார்க்கு ⋆
உறு துயர் இல்லை உலகத்தே ॥ **11.3.10** ॥

அடிவரவு — மன்னிலங்கு இருந்தான் அன்னே அறியோம் தம்மை வைத்தார் கண்ணன் பாடோமே நன்னெஞ்சே பெற்றாரார் நிலை

மன்னிலங்கு முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்